“கிராம - அபிவிருத்தி”

# ரூரல் இந்தியா

(பாரெஸ்டு பஞ்சாயத்து பத்திரி...

எடிட்டர், மானேஜர்—எ. ஸ்வாமி நாதய்யர். ரிடை...

ஆபீஸ் : 22, ப்ராடீஸ் ரோட், மைலாப்பூர், ம...

19 JUL 1929

MADRAS

வால்யூம் IV] ஜூன், 1929 [நெ 6

## பொருளடக்கம்.


| நெ. | | பக்கம் |
|---|---|---|
| 44. | இந்தியாவில் கல்வியை அப்பியஸிக்கிற ஜாதியார்களின் எதிர்கால நிலை. | 123 |
| 45. | தெல்ப்பயிர் செய்வோர் கவனிக்க வேண்டிய சில முக்கிய விஷயங்கள். | 1?6 |
| 46. | பாரெஸ்டு பஞ்சாயத்தார்கள் யூனியன், லிமிடெட், மைலாப்பூர், மதராஸ். | 131 |
| 47. | நெய்யை எபபடி சுத்தம் செய்யலாம் ? | 136 |
| 48. | கிராம முன்னேற்ற விஷயம். | 138 |
| 49. | வியவஸாயிகளின் மாட்டு விஷயம். | 139 |
| 50. | ஜனங்கள் கிராமத்தில் போய்ச் சேர வேண்டிய அவசியம் | 140 |
| 51. | உணவுகளில் ஆரோக்கிய ஆதாரப் பொருள்கள். | 141 |
| 52 | வர்த்தமானக் குறிப்பு. | 144 |
| 53. | ஆரோக்கிய விஷயக் குறிப்புகள். | 146 |
| 54. | மதிப்புரை. | 148 |



| | | |
|---|---|---|
| வருடச் சந்தா : | உள்நாடு ரூ 3. | வெளிநாடு ரூ 4 8 0 |
| தனிப்பிரதி: | ,, அணா 6 | ,, அணா 8 |

# " கிராம அபிவிருத்தி" (ரூரல் இந்தியா) பஞ்சாங்கம்.

சுக்கில ௵ ஆனி மீ

இங்கிலீஷ் 1929ம் ௵ ஜூன்-ஜூலைமீ

| ஜூன் | ஆனி | வாரம் | திதி | நக்ஷத்திரம் | யோகம் | விசேஷங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 14 | 1 | வெ | அஷ் 55-18 | பூர 11-18 | சி55அ | கரிநாள் |
| 15 | 2 | ச | நவ 53-58 | உத்ர 10-58 | ம60 | செடிகள் நட |
| 16 | 3 | ஞா | தச 53-50 | ஹஸ் 11-46 | அ12சி | முகூர்த்த நாள் ஏர்கட்ட |
| 17 | 4 | தி | ஏகா 54-57 | சித் 13-48 | ம14அ | சங்கீதாரம்பம் |
| 18 | 5 | செ | துவா 57·20 | சுவா 17-4 | சி17ம | ராமலட்சமண துவாதசி |
| 19 | 6 | புத | திர 60-0 | விசா 21-31 | சி60 | கரிநாள் |
| 20 | 7 | வி | திர 0-50 | அநு 26-59 | சி27ம | சிரஹப்பிரவேசம் |
| 21 | 8 | வெ | சது 5-11 | கே 29-59 | ம30அ | கிரீடம் சூட்ட |
| 22 | 9 | ச | O ப9-54 | மூல 39-22 | சி60 | உபநயனம் |
| 23 | 10 | ஞா | பிர 14-49 | பூரா 45-43 | சி46ம | மருந்துண்ண |
| 24 | 11 | தி | துதி 19-27 | உத் 51-44 | ம52அ | சீமந்தம் |
| 25 | 12 | செ | திரு 23-29 | திரு 56-56 | சி60 | அன்னப்பிராசனம் |
| 26 | 13 | புத | சது 26-32 | அவி 60-0 | ம60 | பெண்ணழைக்க |
| 27 | 14 | வி | பஞ் 28-28 | அ 1-3 | சி1ம | பூமிவாங்க கடன்தீர்க்க |
| 28 | 15 | வெ | சஷ் 29-9 | சத 4-1 | ம4சி | முகூர்த்தம் |
| 29 | 16 | சனி | சப் 28-32 | பூர5-42 | ம6சி | சவுளம் |
| 30 | 17 | ஞா | அஷ்26-43 | உத்6·9 | அ60 | ருதுசாந்தி |
| ஜூலை | | | | | | |
| 1 | 18 | தி | நவ 23-47 | ரே5-29 | சி60 | பூமுடிக்க |
| 2 | 19 | செ | தச19-55 | அசு3-4 | சி60 | மூலிகை பிடுங்க |
| 3 | 20 | புத | ஏகா15-15 | பர1.18<br>*கா56-46 | சி1அ | கிருத்திகை விரதம் |
| 4 | 21 | வி | துவா 9-58 | ரோ54-22 | ம60 | முகூர்த்தம் |
| 5 | 22 | வெ | திர4-12<br>சது53-54 | மிரு50-20 | சி60 | மழைபெய்யலாம் |
| 6 | 23 | சனி | ● அ52-0 | திரு46-14 | சி60 | சதிராருக்க |
| 7 | 24 | ஞா | பிர45-59 | புன42-13 | சி60 | மழை பெய்யலாம் |
| 8 | 25 | தி | துதி40-22 | பூச38-34 | சி60 | முகூர்த்தம் |
| 9 | 26 | செ | திரு35-14 | ஆயி35-25 | சி60 | மழை பெய்யலாம் |
| 10 | 27 | புத | சது30-15 | மக32-53 | சி33அ | விதைவிதைக்க |
| 11 | 28 | வி | பஞ்27-6 | பூர31-14 | சி31ம | மாடுவாங்க |
| 12 | 29 | வெ | சஷ்24-30 | உத்30-36 | சி31அ | முகூர்த்தம் |
| 13 | 30 | சனி | சப்23-2 | அஸ்41-8 | ம60 | கும்பாபிஷேகம் |
| 14 | 31 | ஞா | அஷ்22-50 | சித்32-53 | சி60 | நாமகரணம் காதுகுத்த |
| 15 | 32 | தி | நவ23-54 | சுவா35-54 | அ36ம | முகூர்த்த நாள் |

19 JUL 1929


# ரூரல் இந்தியா

(பாரேஸ்டு பஞ்சாயத்து பத்திரிகை)

எடிடர் மானேஜர்:—எ. ஸ்வாமிநாதய்யர், ரிடைர்ட் டிப்டிகலெக்டர்

ஆபீஸ்: 22, பாரடைஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்.

வால்யூம். IV. ஜூன் 1929. நெ. 6


## இந்தியாவில் கல்வியை அப்பியஸிக்கிற ஜாதியார்களின் எதிர்காலநிலை.

[திவான் பஹதூர் டி. ராகவய்யா ஸி. எஸ். ஐ. அவர்கள் எழுதியது.]

பிராம்மணரல்லாத ஜாதியர்களும் தாழ்ந்தவகுப்பினர்களும் கவர்மெண்டு உத்தியோகங்கள் பிராம்மணர்களுக்கே கொடுக்கப்பட்டு வருவதைப்பற்றி ஆக்ஷேபித்துக்கொண்டும், தங்களுக்கும் அவைகள் சரியானபடி கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டும் வருவதால் பிராம்மணர்களுக்குப் பதிலாக பிராம்மணரல்லாதவர்கள் கவர்மெண்டு உத்தியோகங்களில் அமைக்கப்படுகிறார்கள். தாழ்ந்த வகுப்பினர்களும் பிராமணரல்லாத ஹிந்துக்கள் உத்தியோகங்களை வகிக்கிறார்களென்று கூச்சலிட்டுக்கொண்டு தங்களுக்கும் தக்கபடி உத்தியோகங்கள் கொடுக்கப்பட வேண்டும் என்று கவர்மெண்டாரை நிர்ப்பந்தப்படுத்துவதால் அவர்களும் பிராம்மணரல்லாத ஹிந்துக்களுக்குப்பதிலாக உத்தியோகங்களில் அமைக்கப்படுகிறார்கள். பிராம்மண ஜாதியரும் இதரமான. கல்வியை அநுஸரிக்கிற இதர ஜாதியர்களும் தேசத்தில் செல்வத்தை உண்டாக்குகிற முயர்ச்சிகளில் சம்மந்தப்படாமலிருந்தபோதிலும் அவர்களுடைய உபதேசங்களினாலும் ஆச்சாரங்களினாலும் போதனைகளினாலும் சமூகத்தில் அதிகச்செல்வம் உண்டாகும்படியாகவும் அச்செல்வம் அச்சமூகத்திற்குச்சரியானபடி உபயோகப்படும்படியாகவும் செய்கிறார்கள் சமூகத்தின் வேலை எப்பொழுதும் அதிகச் செல்வத்தை உண்டாக்க.

அதன் வாழ்வை சிறப்பிப்பதே. சமூகத்தில் 100க்கு 6 பெயர்கள் தான் கல்வியை அப்பியஸிக்கிற ஜாதியர்கள். அவர்கள் செல்வத்தை விளைக்கிற முயர்ச்சிகளில் ஏற்படுகிறதில்லை; ஆனால், அவர்கள் போதனைகள், உபதேசங்கள், ஆச்சாரங்கள், இவைகளின் மூலமாகச் சமூகத்திற்கு செல்வமும் உயர்வாழ்வும் ஏற்படும் படிச் செய்கிறார்கள். பிராம்மணர்களையும், கல்வியை அப்பியஸிக்கிற இதர ஜாதியர்களையும் விருக்ஷங்களிலும், செடிகளிலும் இருந்துக்கொண்டு அவைகளின் சத்தையே ஆகாரமாக வைத்துக்கொள்கிற கிருமிகளுக்கு ஒப்பிடக் கூடும். இவ்விதக்கிருமிகளில் இரண்டுவகைகள் உண்டு. அவையாவன, ஒன்று நல்லவகை: மற்றொன்று கெட்டவகை: நல்லவகைக்கிருமியானது தாவரங்களின் சந்துகளிலிருந்து ஆகாரத்தை அடைந்த போதிலும் அத்தாவரங்களைப் போஷிப்பதுடன் கெட்டவகைக் கிருமிகளையும்தின்று தாவரங்களை ரக்ஷிக்கிறது.

ஆங்கிலேயர்களின் ஆக்ஷி ஏற்படுவதற்கு முன் பிராம்மணர்களும், கல்வியை அப்பியஸிக்கிற இதர ஜாதியர்களும் முன் சொல்லப்பட்ட கிருமிகளில் நல்லவகைக்கிருமிகளைப்போல் சமூகத்திற்கு வாய்ந்திருந்தனர். சமூகம் அவர்களைப் போஷித்து, ஆதரித்து வந்ததற்கு அவர்கள் தேசத்திற்கு சிறந்த மதங்களையும், வேதாந்த ஞானத்தையும், கலைகளையும் உண்டுபண்ணி அபிவிருத்தி செய்தனர் பிரிடிஷ் ஆக்ஷி ஏற்பட்டபிறகு அவர்கள் அவ்விதமாகப்பாடுபடுவதை விட்டு விட்டு அதிகாரிவர்க்கத்தவர்களுக்கு உழைத்து ஜீவனஞ்செய்ய ஆரம்பித்தனர். அப்படி ஊழியஞ் செய்வதில் அவர்கள் சம்பளங்களாகச் சமூகம் இராஜாங்கத்திற்குச் செலுத்துகிற வரிப்பணத்திலிருந்து தொகைகளையடைய ஆரம்பித்தார்களே யொழிய சமூகச் செல்வத்தையுயர்த்த வேண்டிய வழிகளில் அவர்கள் முயர்ச்சிகளைச் செய்யவில்லை. ஆகையால், சமூகமானது இந்த விஷயத்தை உணர்ந்து அவர்களை நிந்திக்க ஆரம்பித்தது; பிராமணர்கள் தாங்களே எல்லா உத்தியோகங்களை வஹிக்க முயலுவதை அது கவனித்தது; ஒரே வகுப்பே எல்லா உத்தியோகங்களையும் வஹித்துக்கொண்டு சம்பளங்களையடைந்துகொண்டு இரண்டாவது அதிகாரிவர்க்கமாக ஏற்படுவது சுய ஆக்ஷித்தத்துவங்களுக்கு விரோதமானது பற்றி அவ்விதசீர்கேட்டை யொழிப்பதற்குச் சமூகம் கங்கணங்கட்டிக்கொண்டது. இவ்விதக்கிளர்ச்சியேற்பட்டதால் அநேகபிராம்மண உத்தியோகஸ்தர்

199383



களுக்கு உத்தியோகங்கள் உயருவதில் கஷ்டங்கள் ஏற்பட்டன, இன்னும் கணக்கிடக்கூடாத, கல்வியில் தேறியிருக்கிற பிராம்மண வாலிபர்களுக்கு உத்தியோகங்கள் அகப்படுவது வெகு பிரயாசையான விஷயமாக ஏற்பட்டு விட்டது. படிப்புச் சிலவுகள் வீண் சிலவுகளாக ஏற்படப்போகின்றன. ஆகவே பிராம்மணர்கள் தாங்கள் கவர்மெண்டு உத்தியோகங்களைச் செய்து அதிகாரிவர்க்கத் தவர்களைத்திருப்திசெய்து, பணங்களை சம்பாதித்து வெகுசந்தோஷமாக யிருக்கலா மென்று இனிமேல் எண்ணவே எண்ண முடியாது. அவர்கள் முன்காலத்தில் போல் சாதாரண அந்தஸ்தில் வாழ்ந்து கொண்டு ஞானவழிகளில் புத்தியை பிரயோகிக்க வேண்டும். அவர்கள் முன் போல் நல்லவகைக்கிருமிகளாக சமூகத்திற்கு உழைப்பதற்கு அமையவேண்டும். சமூகத்திற்கு உழைப்பதை அவர்கள் நிறுத்தியதால் அவர்களுக்கு இவ்விதக் கேடு வந்ததென்று உணர்ந்து அவர்கள் முன்போல் சமூகதிற்கு உழைப்பதையே தங்களுடைய முயர்ச்சிகளாகக் கொள்ளவேண்டும். நிலங்களையுடையவர்கள் வியவஸாயத் தொழிலைக் கைப்பற்றவேண்டும். ஆனால், நிலங்களையுடையவர்களின் சங்கியை நமது மாஹாணத்தில் வெகு குறைவாகயிருக்கிறது. 10 ரூபாய்க்கு மேற்பட்டு நிலவரிகளைக் கட்டுகிறவர்களின் சங்கியை 10லக்ஷந்தான்; 5 இலிருந்து 10 ரூபாய் வரையில் நில வரிகளைச்செலுத்துவோரின் சங்கியை 20 லக்ஷம். நம்முடைய மாஹாணத்திலோ 400 லக்ஷம் ஜனங்களிருக்கும் பொழுது மேல் குறிக்கப்பட்ட சங்கியைகள் திருப்தியைக்கொடுக்கூடியவைகளல்லவென்று எல்லோரும் அறியக்கூடும். நிலங்களையுடைய 30 லக்ஷம் ஜனங்களின் நிலங்களும் அவர்களுடைய குடும்பங்கள் வியவஸாய முயர்ச்சிகளை யநுஷ்டிப்பதற்குப் போதுமானவைகளாக விருக்கின்றன வென்றேவைத்துக் கொண்டபோதிலும் மொத்தஜனத்தொகையில் கால்பங்கு கூட சாகுபடித்தொழிலிற்குத்திரும்ப முடியாது. நம்முடைய மாஹாணத்தில் பாதிக்கு மேல்பட்ட ஜனங்களுக்கு நிலமேகிடையாது. சாகுபடிக்கு இப்பொழுது இருக்கப்பட்ட நிலங்களிற்கு மேல் பட்டு அதிக நிலங்களைக் கொண்டு வரக்கூடும் என்பதும் வெறும்பேச்சு. ஆகவே, நிலங்களை உடைத்தாயில்லாத பிராம்மண வாலிபர்களில் சிலர் பிறருடைய நிலங்களை குத்தகைக்கு வாங்கிக்

199383

கொண்டு தங்களுடைய புத்தியையும் கல்வியையும் உபயோகித்து அவைகளைப்பயிர் செய்து ஜீவனங்களை அநுஷ்டிக்கக்கூடும். இன்னும் சிலர் சிறியகைத்தொழில்களை கூட்டுறவு வழிகளில் அதிக மூலதனக் கஷ்டமில்லாமலே அநுஷ்டித்து வரும்படிகளை அடையக்கூடும். அவர்கள் காய்கறிகளை அதிகமாகப்பயிர் செய்யக்கூடும். பட்டணங்களிலும் கிராமங்களிலும் இவைகளுக்கு நல்ல வியாபாரமிருக்கிறது. மாடுகளை வைத்துத் தயிர் பால் வெண்ணெ இவைகளைக் கொண்டு நல்ல ஜீவனத்தை ஏற்படுத்திக்கொள்ளலாம். காய்கறிவர்த்தகர்கள் சரியானபடி கிடைக்கிறதில்லை. அந்தத்தொழிலையும் அவர்கள் அநுஷ்டிக்கக்கூடும்.

பிராம்மணர்களுள் பொது ஜனத்தலைவர்களாக விருக்கிறவர்கள் சமூகஊழியத்தில் அதிகச்சம்பளத்தையும் சுயலாபத்தையும் எதிர்பார்க்காமல் ஊழியஞ்செய்யவேண்டும். கிராம அபிவிருத்தி முயர்ச்சிகளை எல்லோரும் கைக்கொள்ளவேண்டும். கிராமப்பஞ்சாயத்துகள் நம்முடைய மாஹாணத்தில்நன்றாய் வேலைசெய்கின்றன. இவைகளைக்கொண்டு கிராம அபிவிருத்தி முயர்ச்சிகள் நன்றாய் நடத்தப்படக்கூடும்.

சமூக க்ஷேமத்திற்கு ஒவ்வொரு வகுப்பும் உழைக்கவேண்டும் எவ்வெந்த வகுப்புகள் சுயலாபத்தையே முக்கியமாக கருதிசமூகக்ஷேமமுயர்ச்சிகளை அலக்ஷியஞ் செய்கின்றனவோ அவ்வகுப்புகளுக்கெல்லாம் பிராம்மண வகுப்பிற்கு வந்திருக்கிற கதிதான் உண்டாகும்.

## நெல்ப்பயிர் செய்வோர் கவனிக்கவேண்டிய சீல முக்கிய விஷயங்கள்.

[ஆடுதுரை ஸ்தாபனத்தில் நெல் பயிர் நிபுணாக விருக்கும் ம-ா-ா-ஸ்ரீ டி. எஸ். வெங்கடராமன் எம். ஏ. அவர்கள் எழுதியது]

ஆடுதுரை நெல்விரையுற்பத்தி ஸ்தலத்தில் வெகுகால முயர்ச்சிகளின் பயனாக ஒன்பது திறமான நெல்விரை தினுசுகள் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. அவ்விரைகள் தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள வியவஸாயிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. விரைகளின் குணங்களை அறிந்து வியவஸாயிகள் அவைகளை மேல் மேலும் வேண்டுவதால் உற்பத்தியாகும் விரைகள் அவர்களிற்கு வேண்டியபடி கொடுக்கப்படுவதற்குப் போதாமல் போகின்றன. இவ்விரைகளை விதைத்த வியவஸாயிகள் இவைகளின் பயிர்கள் உயரத்தில் ஒழுங்காயிருப்பதையும் கதிர்கள் பின்னும் பின்னுமாக பழுக்காமல்



சமகாலத்தில் பழுத்து வருவதையும், அதிக தான்யங்களை அவைகள் உற்பத்தி செய்வதையும் பற்றி வெகு திருப்தியாகப் பேசுகிறார்கள். ஆகையால் இந்த தினுசுகளின் விரைகளைத் தயாரித்து வைத்துக்கொள்வதில் இதர ஈன ஜாதி விரைகள் இவைகளோடு கலக்காமலிருக்கும்படி பாதுகாக்கவேண்டும். கலப்புகள் நாத்தாங்கால்களிலும், சாகுபடி வயல்களிலும், களத்து மேடுகளிலும் ஏற்படக்கூடும். வயல்களில் முந்தியபயிரின் மாசூல் அறுவடையாகிய பிறகு சில தானியங்கள் சிந்திக்கிடக்கும், அவைகளை முளைக்கும்படிச் செய்து அழிக்கவேண்டும. வயல்களில் 3, 4 நாள்கள் வரையில் நீர் பாய்ச்சப்பட்டால் கொஞ்ச நாள்களுக்குள் எல்லா தானியங்களும் முளைத்துவிடும். அவைகள் முளைத்து வந்த பின்பு வயலானது உழப்பட்டால் அவைகள் அழிந்து போகக்கூடும். இதற்குப்பின்பு வயலை புதிய விரைகளை விரைப்பதற்குத் தயார் செய்து புதிய விரைகள் விதைத்தால் பழைய அறுவடை தானியங்களோடு கலந்து போக முடியாது. தஞ்சாவூர் ஜில்லாவில் நஞ்சை நாத்தங்கால்களில் தான் இவ்வித வேலை செய்யப்படக்கூடும். புஞ்சை வயல்களின் சம்பந்தமாய் எடுத்துக்கொள்ளப்படவேண்டிய முயர்ச்சிகள் பின்பு விவரிக்கப்படும்.

நாத்துகள் நடப்படுமுன்னே, வயல்களில் முதல் உழவு ஆன உடனே, நீர்கட்டப்படவேண்டும். பின்பு பழைய அறுவடையில் சிந்தின தான்யங்கள் முளைத்துவிடும் அவைகள் முளைத்த பின்பு வயல்கள் மறுபடியும் உழப்பட்டு நாத்துகள் நடவேண்டிய வழியில் தயாரிக்கப்படவேண்டும். பயிர் பூத்தபின்பு முந்தி முளைத்த செடிகளும் பிந்தி முளைத்த செடிகளும் கண்டுபிடிக்கப்படக்கூடும். அவைகளைப்பிடுங்கி எறிந்துவிடவேண்டும். அப்படிப்போலவே வேறு ஜாதிச்செடிகளிருப்பதும் கண்டுபிடிக்கப்படக்கூடும். அவைகளையும் பிடுங்கி எறிந்துவிடவேண்டும். விரையின் நிமித்தம் தான் இவ்வித வேலை வயல்களில் செய்யப்படவேண்டுமாகையால் கொஞ்சமான ஸ்தலத்தில் அதை அநுஷ்டிப்பதே போதுமானது.

அநேக ஊர்களில் வியவஸாயிகள் பலவகை நெல்களை வயலுக்கொருவகையாக அடுத்தாப்போல் அடுத்தாப்போல் பயிர் செய்வதும், ஒரே வயலில் ஒவ்வொரு பாகத்தில் ஒவ்வொரு வகையாகப்பயிர் செய்வதும் வழக்கமாயிருக்கிறது. இரண்டு அடுத்தாப்போல் அடுத்தாப்போலிருக்கிற ஸ்தலங்களில் ஒன்றில் சிறுமணியையும் மற்றொன்றில்

நெல்லூர் சம்பாவையும் பயிர் செய்தால் ஒரு ஸ்தலத்தின் கோடியி லிருக்கப்பட்ட பயிர், மற்றொருவயலில் மேற்சொன்ன வயலுக்கு ஒட்டினால் போலிருக்கிற பயிருடன் புணர்ச்சியை அடைகிறது சாதாரணமாயிருக்கிறது. சிருமணி நெல்லூர் சம்பாவுடன் புணர்ச்சியையடைந்தபின் உண்டாகும் சிருமணிதானியம் அசல் சிருமணியிலிருந்து பார்வைக்கு வித்தியாஸப்படுகிறதில்லை. அது விதைக்கப்பட்டால் சிருமணிபோன்ற பயிரையே உண்டாக்கி சிருமணிபோன்ற தான்யத்தையே விளைக்கும். சிருமணி தான்யத்தின் மணியானது நெல்லூர் சம்பாதானியத்தின் மணியை விட வலியதாகையால் புணர்ச்சியால் உண்டாகும் வகை வலிய வகையைக்கொள்கிறது. இப்படி விதைக்கப்பட்டபின் விளைந்த தானியம் விதைக்கப்பட்டால் முளைக்கும் பயிர்கள் சில நெல்லூர் சம்பாவைப்போலவும் சில சிருமணியைப்போலவும் வாய்க்கின்றன. விரைக்காக அடிக்கப்படும் கதிர் கட்டுகளில் வயல்களின் ஓரங்களிலிருக்கும் பயிர்களின் கதிர்களைச் சேர்த்துக்கொள்ளாமலிருந்தால் விரையில் கலப்பு ஏற்படாது, மேற்கூறிய கோளாறுகளும் உண்டாக இடமிராது.

களத்து மேடுகளிலும் விரைக்கலப்பு ஏற்படக்கூடும். வியவசாயிகள் அநேக இடங்களில் ஓரே பொதுக்களத்து மேட்டை உடைத்தாயிருக்கிறார்கள். அந்தக்களத்து மேட்டில் பற்பல ஜாதி நெல் கதிர்கள் அடிக்கப்படுகின்றன. களத்துமேடுகள் சுத்தமானநிலையில் வைக்கப்படுகிறதில்லை. விரைக்காக கதிர்கள் அடிக்கப்படுவதற்கு முன்னே களத்து மேடுகள் சரிவரப் பெருக்கப்படவேண்டும். மூலைகள், ஓரங்கள் இவைகளில் கிடக்கக்கூடிய, இதற்குமுன் அடிக்கப்பட்ட கதிர்களின் தானியங்கள் அவைகளிலிருந்து அப்புறப்படுத்தப்படவேண்டும். விரைக்கதிர்கள் களத்தில் மத்திய பாகத்தில் தான் அடிக்கப்படவேண்டும். சிதரிஓடி மூலைகளில் கிடக்கக்கூடிய தானியங்களைப் பொருக்கி எடுக்கக்கூடாது. இவ்விதமாக ஜாக்கிரதையுடன் விரைக்கதிர்கள் அடிக்கப்பட்டால் விரைகள் சுத்தமாகவிருக்குமென்பதைச் சொல்லவேண்டியதில்லை. இவ்வித ஜாக்கிரதைகள் விரைக்கதிர்களையடிப்பதில் மாத்திரம்தான் எடுத்துக்கொள்ளப்படவேண்டுமேயொழிய மற்றசாதாரண உபயோகங்களிற்கு வேண்டிய தான்யங்களுக்காகக் கதிர்களை அடிப்பதில் எடுத்துக்கொள்ளப்படவேண்டியதில்லை.



விரைகளை வியவஸாயிகள் வைக்கோல் திரணைகளால் கட்டியோ அல்லது கோணிகளில் கொட்டியோவைத்துக் கொள்ளுகிறார்கள். வைக்கோல் திரிணைகளில் அவைகளைச்சேர்ந்த சிலகருக்காய்கள், கதிர் காம்புகளிலும் ஒட்டிக்கொண்டு இருக்கக்கூடும். கருக்காய்களும் நன்றாய் முளைவிட்டுவளரக்கூடும். பல வகை நெல்களின் வைக்கோல்களும் திரிணைகளில் கலந்திருக்கக்கூடுமாகையால் விரைகள் கெட்டுப்போவதற்குமார்க்கமேற்படுகிறது. உதாரணமாக, நெல்லூர் சம்பா வைக்கோல்திரிணைகளால் சிருமணிவிரை கட்டப்பட்டதாக எடுத்துக் கொள்வோம். எவ்விதக்கெடுதிஏற்பட்டு விடுமென்பதைச் சொல்ல வேண்டியதில்லை. விரைகளைவைக்கோல் திரிணைகளால் தான்கட்ட வேண்டியதாக விருக்கும் பக்ஷத்தில் உபயோகிக்கப்பட்ட வைக்கோல் திரிணைகள் விரைதினுசைச்சேர்ந்த வைக்கோலைத்தவிர இதரதினுசு வைக்கோல்களை வஹிக்கக்கூடாது கோணிகளில் விரைகளைக்கொட்டி வைக்க வேண்டுமானால் விரைகளை அவைகளில் கொட்டுவதற்குமுன் அவைகளின் உள் புறங்களை வெளிப்புறங்களாக்கி அவைகளில் இங்கு இடுக்குகளில் நெல்கள் இல்லாதபடி அவைகளை நன்றாய் உதரி விட வேண்டும். விதைகள் அடிக்கடி வெய்யலில் உலர்த்தப்பட வேண்டும். உலர்தப்படும் பொழுது அவைகளோடு வேறு நெல்கள் சேராதபடி பார்த்துக்கொள்ள வேண்டும்.

தழைகளை வயல்களில் போட்டு மெதிப்பது வயல்களின் பூஸாரத்தையுயர்த்துகின்றதென்பது வெகு காலமாய்த் தெரிந்த விஷயம்.

தஞ்சாவூர் டெல்டாப் பிரதேசங்களில் ஆற்றில் வெள்ளம் வருகையில் வியவஸாயிகள் தழைக்காக ஆற்றோரங்களிலும், கால்வாய் கரைகளிலும், வேலிகளிலும், கிடைக்கக் கூடிய தழைகளுக்காகப் போட்டிபோடுவதை அந்த ஜில்லாவின் அநுபவத்தை உடையவர் யாவரும் அறிவார்கள். அவர்கள் மழை காலத்தில் ஏராளமாய்க் கிடைக்கக்கூடிய தழைகளையும், பூண்டுகளையும் சாணிகளையும் சேகரித்து ஒரு பள்ளத்தில் கொட்டி எலும்புத்தூள்களைச் சேர்த்து மொத்தையாக்கி வைத்துக்கொள்வார்களாகில் அவர்களுக்கு எரு ஏற்பட்டு விடும், எருவிற்காக அவர்கள் கஷ்டப்படவேண்டியதாகவிராது.

நண்டுகள் நாத்தங்கால்களில் முளைகள் கிளம்புகிற போதே அவைகளைத் தின்று அழிக்கின்றன. நடவான வயல்களிலும் சிறிய பயிர்களை அவைகள் கடித்து விடுகின்றன. நாத்து நஷ்டமும் அதிகமாகிறது. வயல்களின் புதிதாகப் பலவிடங்களில் நாத்துகளை நடவேண்டியதாகவும் நேரிடுகிறது. நண்டுகளின் உபத்திரவங்களைத் தடுப்பதற்கு ஆடுதுறை விரையுற்பத்திஸ்தலத்தில் ஒரு உபாயம் அநுஸரிக்கப்படுகிறது. ஒருவாய கண்ட சட்டியானது வாய் மேலாக மண்மட்ட உயரத்திலேயே வயல்களில் ஒரு மூலையில் புதைக்கப்படுகிறது. அதில் நீர் கலந்த தவிட்டுண்டைகள் இரண்டு போடப்படுகின்றன. வயலில் நீர் நின்றால் சட்டியும் ரொம்பியிருக்கும். ஆனால் தவிட்டுண்டைகள் கரைந்தோடிப்போகாது, சட்டியின் அடியில்தான் தங்கிக்கிடக்கும். நண்டுகள் தவிட்டுவாசனையால் இழுக்கப்பட்டு சட்டியில் விழுகின்றன. விழுந்த பின்பு அவைகள் சட்டியைவிட்டு வெளிக்கிளம்பக்கூடுகிறதில்லை, ஏனென்றால் அவைகள் மேலே ஏறிவர எத்தனிக்கையில் சட்டிக்குள் சரிந்து விழுகின்றன. சட்டிக்குள் இருக்கும் தவிட்டுண்டைகள் இரண்டு மூன்று நாள்களுக்கொருவிசையாக எடுத்தெறியப்பட்டு புதுத்தவிட்டுண்டைகள் அதற்குள் போடப்படவேண்டும். ஒரு ஏகருக்கு 5 சட்டிகளாக இவ்விதச் சட்டிகள் அமைக்கப்படவேண்டும். பாய்கால் தலைப்பில் ஒன்றும், வடிகால் தலைப்பில் ஒன்றும், மத்தியில் ஒன்றும், 2 மூலைகளில் இரண்டுமாக அமைக்கப்படவேண்டும். கால்வாய்களின் மூலமாய் நீர்பாய்வதால், கால்வாய்களில் கூட அவைகள் அமைக்கப்படலாம். நீர்பாய்ச்சுகிறவன் இந்தச்சட்டிகளைக்கவனிக்கவேண்டும். ஒவ்வொரு நாளும் அவன் அச்சட்டிகளில் விழுந்து கிடக்கும் நண்டுகளை எடுத்துக்கொன்று குழிகளில் போட்டு பக்ஷிகள் கொத்தாதபடி மண்ணைப்போட்டு மூடவேண்டும். இது நல்ல எருவாகிறது. ஆடுதுறை நெல் விரை ஸ்தலத்தில் நண்டுகள் இவ்விதமாகக் கொல்லப்பட்டதால் 20 வண்டி எரு ஒரே விவஸாய காலத்தில் கிடைத்தது. நண்டு எரு சாணி எருவைவிட உயர்ந்ததென்று அறியப்பட்டிருக்கிறது. நண்டு எருவால் 100க்கு 11 வீதம் அதிக தானியம் விளைகிறதென்றும் 100க்கு 37 வீதம் அதிக வைக்கோல் உண்டாகிறதென்றும் அறியப்பட்டிருக்கிறது.



## பாரெஸ்டு பஞ்சாயத்தார்களின் யூனியன் லிமிடெட் மைலாபூர், மதராஸ்.

ஆர்டிகல்ஸ் ஆப் அஸோஸியேஷனின் 75 (1) ஆர்டிகில்படி யூனியனின் ஸ்டாடியூடரி மீடிங்கு 1929 வருஷம் ஜூன்மீ 4உ யன்று யூனியனின் ரிஜிஸ்டர்டு ஆபீஸில் நடைபெற்றது. யூனியனின் பிரஸிடெண்டாகிய ம-ள-ள-ஸ்ரீ ஆ. ராஜகோபால ரெட்டிகாரு அக்ராஸனம் வஹித்தார். டைரெக்டர்கள் தயாரித்த ஸ்டாடியூடரி ரிபோர்டு மீடிங்கில் அங்கீகரிக்கப் பட்டது. ஷை ரிபோர்டு அடியில் காணப்படும். டைரெக்டர்கள் தயாரித்த பைலாக்களும் அங்கீகரிக்கப்பட்டன. அடியில் கண்ட தீர்மானங்களும் கைக்கொள்ளப்பட்டன. "ரூரல் இந்தியா" பத்திரிகைக்காக ஸப்ஸ்கிருப்ஷன் தொகைகளைச் செலுத்தாமலிருக்கிற பஞ்சாயத்துகளை அக்கட்டணங்களை பாக்கியில்லாமல் உடனே செலுத்தும்படிக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. ரூரல் இந்தியா பத்திரிகையானது பாரெஸ்டுப்பஞ்சாயத்தார்களின் யூனியனின் முயர்ச்சிகளைச் சேர்ந்த சொந்தப் பத்திரிகையாகையால் ஒவ்வொரு பாரெஸ்டு பஞ்சாயத்தும் அப்பத்திரிகைக்குச் சந்தாதாரராக சேர வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

சந்தா பாக்கிதொகைகள் பாரெஸ்டு பஞ்சாயத்துகளிடத்திலிருந்து வஸூலிக்கப்பட்ட பின்பு டைரெக்டர்கள் யூனியனின் நிர்வாஹ ஸம்பந்தமாகவும் "ரூரல் இந்தியா" ப்பத்திரிகைச் சிலவுகளுக்காகவும் யூனியனின் டிபாஸிட் கரண்டு அக்கவுண்டிலிருந்து எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கும் அட்வான்ஸு தொகைகளைத் திருப்பிக் கொடுத்து விடவேண்டுமென்றும் தீர்மானிக்கப் பட்டது. டைரெக்டர்கள் ரூரல் இந்தியாப் பத்திரிகைச் சந்தா பாக்கித்தொகைகளை பஞ்சாயத்துகளிலிருந்து வஸூல் செய்ய வேண்டிய வழியில் இடை விடாமல் முயர்ச்சி செய்ய வேண்டுமென்றும் தீர்மானிக்கப் பட்டது.

இந்த மீடிங்கில் யூனியனில் டிபாஸிட்களை வைத்திருக்கிற ஜனரல் பாடி மெம்பர்களின் ஸங்கியை குறைவாக விருப்பதால் டிபாஸிட்களின் விஷயமாய் வட்டி கொடுக்கப்படவேண்டிய விஷயம அடுத்த ஜனரல் மீடிங்கில் ஆலோசனைக்கு ஒதுக்கி வைக்கப் பட்டிருக்கிறது என்று தீர்மானிக்கப் பட்டது.

1930வருஷம் முதல் யூனியனின் நிர்வாஹச் சிலவு, பிரச்சாரச் சிலவுகள் இவை நிமித்தமாக பிரதி பாரெஸடு பஞ்சாயத்தும் ஐந்து ரூபாயை செலுத்த வேண்டு மென்றும், அத்துகை, இப்பொழுது "ரூரல் இந்தியா" பத்திரிகைச் சந்தாவைப்போல் வசூலிக்கப்பட வேண்டுமென்றும் தீர்மானிக்கப் பட்டது. ஆகவே, 1930 வருஷம் முதற்கொண்டு ரூரல் இந்தியா சந்தாவென்று ரூபாய் மூன்றை பஞ்சாயத்துகள் செலுத்தவேண்டியதில்லை. மேற் கூறிய ஐந்து ரூபாயான்து பத்திரிகைச் சந்தா, பிரச்சாரச்சிலவுகள் இவைகளுக் கெல்லாமாக ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

பாரெஸ்டுப் பஞ்சாயத்து மஹா நாட்டிலும் ஜனரல் பாடி மீடிங்கிலும் தீர்மானிக்கப்பட்ட படியே இந்த மீடிங்கும் கவர் மெண்டார் உத்திற விற்கு மீறிய அதிக மேய்ச்சல் களின் நிமித்தம் வசூலிக்கிற கட்டணங்களை பஞ்சாயத்துகளுக்குக் கொடுக்கவேண்டு மென்று தீர்மானிக்கப்பட்டது.

பாரெஸ்டு பஞ்சாயத்தார் களின் யூனியனன்து எல்லா பாரெஸ்டுகளின் பஞ்சாயத்துகளின் நன்மைக்காகப் பாடு படுகிறதாகையால், எல்லா பாரெஸ்டு பஞ்சாயத்துகளும் யூனியனை ஆதரித்து ஒத்துழைத்து அதன் நோக்கங்கள் பயன் பட வேண்டிய வழியில் அதற்கச் சிலவுகளுக்குப் பணம் வேண்டியிருந்தால் பண உதவி செய்ய வேண்டு மென்றும் இந்த மீடிங்கு கேட்டுக் கொள்ளுகிற தென்றும் தீர்மானிக்கப்பட்டது.

பாரெஸ்டுப் பஞ்சாயத்தார்களைப் பாரெஸ்டு விஷயங்களில் பாரெஸ்டு உத்தியோகஸ்தர்களைக் கொண்டு பயிர்ச்சி செய்ய வேண்டிய விஷயமாய் யூனியனனது ரெவினியூபோர்டாரோடு கலந்து ஆலோசனை செய்து ஒவ்வொரு ஜில்லாவிலும் தக்க இடங்களில் ஒரு மாசம் அல்லது 6 வாரம் வரையில் ஸெஸ்ஷனல் ஸ்கூல்களை வைத்து நடத்த வேண்டும் என்று தீர்மானிக்கப் பட்டது.

கவர்மெண்டுபாரெஸ்டுதோட்டஸ்தலங்களிலிருந்து விதைகளையும் நாத்துகளையும் பஞ்சாயத்து பாரெஸ்டுகளின் உபயோகத்திற்காகப் பஞ்சாயத்து களுக்கு யூனியனனது இலவசமாய் வாங்கிக் கொடுக்கப் பிரயத்தினப் படவேண்டுமென்றும் தீர்மானிக்கப் பட்டது.



யூனியனனது மாஹானஸ்தாபனமாகையால் ஜனரல் பாடி மெம்பர்கள் வெகு வெகு தூரஸ்தலங்களில் வசிக்கிறபடியால் மீடிங்கில் 50 பெயர்கள் ஆஜராவது கஷ்டமாயிருக்கிறது. ஆகையால் யூனியனனது ஜாயிண்டு ஸ்டாக்கு கம்பனி ரிஜிஸ்டிராருடன் ஆலோசித்து கோரத்தை இப்போதிய ஸங்கியையாகிய 50 இலிருந்து 20 ஆகச் செய்ய வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

## ஸ்டாடியூடரி ரிபோர்ட்.
## (Statutory Report)

யூனியனின் பிரஸிடெண்டாகிய ம-ா-ா-ஸ்ரீ அ· ராஜகோபால ரெட்டியாரு தாகல் செய்வதற்கு ஆஜர்படுத்தியது. அக்யக்ஷகர்கள் அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக்கொள்வதாவது:—

1. அல்லாட் செய்யப்பட்ட மொத்த பங்குகள் அறு நூத்தி அறுபத்தி மூன்று.

2. மேற்கூறிய பங்குகளின் நிமித்தம் ரூபாய் 663 வசூலிக்கப் பட்டது.

3. 1928ம் வருஷம் எப்பிரல்மீ 1உ முதல் 1929 ஹு மேமீ 18உ வரையில் மூலதன வரவு சிலவுக்கணக்கின் விவரங்கள்.—

| வரவு | ரூ | அ | பை |
|---|---|---|---|
| மூலதனப்பங்குப்பணம் | 663 | 0 | 0 |
| பாரெஸ்டு பஞ்சாயத்துகளின் டிபாஸிட்டுகள் | 1665 | 0 | 0 |
| பிரஸிடெண்டு அவர்களிடமிருந்து அட்வான்சு | 282 | 13 | 0 |
| மூன்றுவது பாரெஸ்டு பஞ்சாயத்து கான்பரன்ஸிலிருந்து கிடைத்த அட்வான்சு | 500 | 0 | 0 |
| பாரெஸ்டு பஞ்சாயத்து பாங்கின் யூனியனிலிருந்து அடைந்த பணம் | 27566 | 2 | 7 |
| பஞ்சாயத்துகளால் திருப்பிக்கொடுக்கப்பட்ட கடன்துகைகள் | 200 | 0 | 0 |
| ஸஸ் பென்ஸு | 59 | 3 | 6 |
| ரூரல் இந்தியா சந்தா | 1295 | 3 | 0 |
| ,, அட்வர்டிஸ்மெண்டு | 349 | 8 | 0 |
| ,, வாடகை | 120 | 11 | 0 |
| ,, வட்டி | 1070 | 5 | 2 |
| புஸ்தக விற்பனை | 12 | 14 | 6 |
| ஆக | 33,784 | 12 | 9 |

| சிலவு | ரூ | அ | பை |
| --- | --- | --- | --- |
| ஆரம்பச்சிலவுகள் | 296 | 0 | 0 |
| பஞ்சாயத்துகளுக்கு டிபாஸிட்டுகளைத்திருப்பியது | 5628 | 5 | 6 |
| பஞ்சாயத்துகளுக்கு கடன் கொடுத்தது | 200 | 0 | 0 |
| பிரஸிடெண்டுக்கு அட்வான்சு கொடுத்தது | 332 | 6 | 3 |
| வாடகை அட்வான்சு | 54 | 0 | 0 |
| பர்னிச்சர் | 30 | 0 | 0 |
| பிரிண்டிங்கு சிலவு பேபர் உள்பட (பத்திரிகைக்கு) | 2060 | 9 | 9 |
| டிரான்ஸிலேடர்களுக்குக்கொடுத்தது | 250 | 2 | 0 |
| சிப்பந்திச்சிலவு | 540 | 4 | 5 |
| தபால்ச்சிலவு | 436 | 14 | 3 |
| வண்டிச்சிலவு | 20 | 5 | 6 |
| அட்வர்டிஸ்மெண்டு கமிஷன் | 103 | 2 | 8 |
| வாடகை | 216 | 0 | 0 |
| கண்டிஞ்சண்டு | 49 | 9 | 1 |
| மிஸ்ஸலேனியஸ் | 40 | 12 | 3 |
| ரிஜிஸ் டிரேஷன் | 10 | 2 | 0 |
| ஆடிட் சிலவு | 75 | 0 | 0 |
| எடிடரிடத்தில் இருப்பு | 197 | 8 | 4 |
| சென்னை சென்டிரல் அர்பன் பாங்கில் கரண்டு டிபாஸிட் | 10,679 | 2 | 6 |
| ஷை பாங்கில் பிக்ஸட் டிபாஸிடில் இருப்பு | 8652 | 13 | 0 |
| ஷை பாங்கில் ப்ரூடெண்ஷியல் டிபாஸிட்டில் | 2161 | 15 | 1 |
| மைலாப்பூர் இந்தியன் பாங்கில் கரண்டு அகவுண்டு | 735 | 2 | 0 |
| ஷை பாங்கியில் ஸேவிங்ஸ் பாங்கி கணக்கில் | 1014 | 10 | 2 |
| ஆ. | 33,784 | 12 | 9 |

4. சிலவுபக்கத்தில் கூறப்பட்ட கடைசி ஐடங்களும் யூனியனின் தற்போதிய இருப்புத் தொகையாகியரூபா23,441-3-1க்கு விவரங்கள் :

5. கம்பெனியின் ஆரம்பச் சிலவு விவரங்கள் :

| | | | |
| --- | --- | --- | --- |
| லாச்சிலவு | 140 | 0 | 0 |
| ஸ்டாம்பு | 80 | 0 | 0 |
| ரிஜிஸ்டரேஷன் | 58 | 0 | 0 |
| ஆர்டிகல்ஸ் ஆப் அஸோஸியேஷனை அச்சடிக்க | 18 | 0 | 0 |
| ஆ. | 296 | 0 | 0 |



6. டைரக்டர்களின், பெயர்கள் தொழில், விலாஸம் முதலிய விவரம் :—

ம-ா-ா-ஸ்ரீ ஆ. இராஜகோபாலரெட்டிகாரு, பாலவாக்கம் ஊத்துகோட்டைபோஸ்டு, வியவஸாயம்

,, பி. சின்னசாமிரெட்டியார் அவர்கள், பள்ளிக் குப்பம், ஊத்துக்கோட்டைபோஸ்டு ,,

,, பி. பாலசுப்ரமண்ணிய ரெட்டிகாரு, சந்த வேலூர் போஸ்டு ,,

,, குமாரஸாமிப்பிள்ளை அவர்கள், சிறுவாடா, சத்தியவேடு போஸ்டு ,,

,, சுங்கர வெங்கடசுப்பாரெட்டிகாரு, சிமகுர்த்தி போஸ்டு ,,

,, பெத்தா சித்தமநாயுடுகாரு பந்தர்லபள்ளி, பூத்தளப்பட்டு, போஸ்டு ,,

,, முத்துகுமாரப்பரெட்டிகாரு, கட்டலை, திண்டிவனம் போஸ்டு ,,

,, எஸ், ஈசுவர அய்யர் அவர்கள், எலையூர் பாச்சல் போஸ்டு ,,

,, ஷேக் அப்துல்லா ஸாஹீப்பு, குருபுரம் திருவள்ளூர் போஸ்டு ,,

ஆடிடர்

ம-ா-ா-ஸ்ரீ பி. எஸ். சுப்ரமணிய அய்யர், அவர்கள், பி. ஏ., ஜி. டி. ஏ., ஸர்டிபைட் அகவுண்டெண்டு அண்டு ஆடிடர், 307, லிங்க செட்டிதெரு, சென்னை.

மானேஜர்

ம-ா-ா-ஸ்ரீ ஆ இராஜகோபால ரெட்டிகாரு. பாலவாக்கம் ஊத்துக் கோட்டை போஸ்டு, செங்கல்பட்டு ஜில்லா.

20—5—29.

இந்த ரிபோர்ட்டை நாங்கள் ஸெர்டிபை செய்கிறோம்.

பி. சின்னசாமி ரெட்டி
ஆ. ராஜகோபால் ரெட்டி
இரண்டு அத்யக்ஷகர்கள்.

இந்த ரிபோர்டில் கண்ட அல்லாட் செய்யப்பட்ட பங்குகளைப் பற்றின விஷயங்களும், அந்தபங்குகளின்படி பணம் வந்த விபரமும் கம்பெனியின் மூலதன வரவு செலவு விவரங்களும் யாதொரு பிழையில்லாமல் ஸரியாகத் தயாரிக்கப்பட்டிருக்கின்றனவென்று ஸர்டிபை செய்கிறேன்.

பி. எஸ். சுப்பிரமண்ணிய ஐயர்
பி. ஏ., ஜி. டி. ஏ.
20—5—29
ஸர்டிபைட் அகௌவுண்டேண்டு
அண்டு ஆடிடர்

## நெய்யை எப்படி சுத்தஞ்செய்யலாம்?

[வங்காளத்தில் ரஸாயன நிபுணராக விருக்கும் டாக்டர் கே. எல். டட்டா பி. எஸ்ஸீ. எப். ஸி. எஸ். அவர்கள் எழுதியது.]

வெண்ணையைக்காய்ச்சி நெய்யாக்குவதில் பல சீர்திருத்தங்கள் அநுஷ்டிக்கப்பட வேண்டும். வங்காளத்திலும் ஐக்கிய மாகாணங்களிலும் ஜனங்கள் நெய்காய்ச்சுவதில் சீர் முறையைக்கண்டுபிடித்துச் சொல்லவேண்டுமென்று கவர்மெண்டாரைக்கேட்டுக் கொண்டதின் பேரில் கவர்மெண்டார் ஆராய்ச்சிகளைச்செய்து அவர்கள் அநுஷ்டிக்க வேண்டிய சீர்முறையை வெளியிட்டிருக்கின்றனர்.

பசு, எருமை இவைகளின் வெண்ணையைக் காய்ச்சித்தான் நெய் உண்டாக்கப்படுகிறது. இப்படி நெய்காய்ச்சுவது பால் தயிர் வியாபாரத்தைச்செய்யப்பட்டவர்களால் அநுஸரிக்கப்படுகிறது. பசு எருமை இவைகளின் வெண்ணைகளை காய்ச்சப்பட்டபோதிலும் அவ்வெண்ணைகளில் அம்மிருகங்களின் மூத்திரம், சாணி அழுக்கு இவைகள் சேர்ந்திருப்பது ஸஹஜமாயிருக்கிறது. ஆகையால் நெய்யானது கடைக்கு விற்பனைக்கு அநுப்பப்படுவதற்கு முன்னே சுத்தப்படுத்தப்பட வேண்டியதாக விருக்கிறது. அழுக்கினால் நெய்யின் வர்ணம் மாறிவிடுகிறது. சாதாரணமாக நெய்யை சுத்தப்படுத்துவதற்கு ஜனங்கள் நெய்யை உருக்கி காய்ச்சுகிறார்கள். அப்படி காய்ச்சும்பொழுது நெய்யிலுள்ள அசுத்த வஸ்துக்கள் அதிலிருந்து பிரிந்து மேலே வருகின்றன. அசுத்த வஸ்துக்கள் மேலே வந்தபோதிலும் இன்னும் நெய்யில் அசுத்தங்கள் இருந்து கொண்டேயிருக்கும். மேலும், காய்ச்சப்படுவதால் நெய் கெட்டியாய் விடுகிறது. நெய் ஜலத்தோடு வெகு



நேரம் காய்ச்சப்பட்டால் அது தன்னுடைய சுபாவ வாஸனையை இழந்து விடுகிறது. கீழே குறிக்கப்படும் முறை அநுஷ்டிக்கப்பட்டால் நெய் அசுத்தவஸ்துக்களில்லாமலும், அதன் சுவபாவவர்ணத்தோடும் சுவபாவவாஸனையோடும் சுத்தமாய் விடும்: ஒரு ஆழமான இரும்பு ஏனத்தில் நெய்யைக்கொட்டி அதில் நெய்யின் நிறையைப் போல் இரண்டுபங்கு நிறையுள்ள ஜலத்தை விட்டு தீ அதிகமில்லாமல் மெதுவாக காச்சவேண்டும். காயும் பொழுது இடைவிடாமல் ஒரு ஆப்பையால் நெய்யும் நீரும்கிளரப்பட வேண்டும். இப்படி கிளரப்படும் பொழுதுநெய்யின் அசுத்த வஸ்துக்கள் நீரில்சேர்ந்துகொண்டுவரும், நெய் சுத்தப்பட்டுக்கொண்டு மேலேவரும். இப்படி சுத்தமாகிவரும் நெய்யின் அடிபாகத்தில் அசுத்தங்கள் தங்கிநிற்குவதைநாம்கவனிக்கக் கூடும். ஜலம்கொதிக்கஆரம்பிக்கிறவரையில். தான் இக்கலப்பு கிளரப் படலாம் 5 நிமிஷம்வரையில் தான் அது கொதிக்க வைக்கப்படலாம். 5 நிமிஷமானபிறகு அதை ஆர வைக்க வேண்டும். ஆறின பிறகு நெய்யானது நல்ல வாஸனையுடனும் சுவபாவ வர்ணத்துடனும் அமையும், நெய்யிலிருந்த மிருகமல மூத்திர அம்சங்கள் நீரில் கரைந்து வெள்ளையாகவும் மங்கலாகவுமிருப்பதை நாம் காண்போம். நெய் மேலும் நீர் கீழுமாக இருக்கும்.

பிறகு ஒரு பாத்திரத்தின் மேல் சுத்தமான துணியைப்போட்டு நெய்யைக்கொட்டி வடிக்கட்டவேண்டும். அடி நெய்யில் மஷ்டுக்கள் தங்கியிருக்குமாகையால் அதை மறுபடியும் அசுத்த நெய்யைச்சுத்தப்படுத்துகையில் அதனுடன் சேர்த்து சுத்தப்படுத்தலாம். மேற்சொன்னபடி சுத்தப்படுத்தப்பட்ட நெய்யானது ஆறின பின்பு மணல் மணலாக ஆகிவிடும். மணல் மணலாக நெய் ஆகாதபடி கட்டியாக விருக்கவேண்டுமானால் ஆறி வருகிற பொழுது அதை நன்றாய் கிளரவேண்டும். நெய் தகரடப்பிகளில் கொட்டப்பட்டு அவைகளின் துவாரம் ஒட்டப்பட்டு வெகுகாலம் வரையில் வியாபாரத்திற்குக் கடைகளுக்கு அனுப்பப்படுவதால் முன்னதாகவே நெய்யில் உஷ்ணவாயுவைப் பாய்ச்சி அதிலுள்ள ஈரத்தை வற்றச் செய்யவேண்டும். ஏனெனில், நீருடன் நெய் காய்ச்சப்பட்டதால் அதில் ஈரம் கொஞ்சம் இருந்து கொண்டிருக்கும். அவ்வீரமானது நெய் நாள்பட வைக்கப்பட்டால் நெய்யைக்கெடுத்துவிடும். ஒரு இரும்பு குழாயை நெருப்

பின் மேல் பிடித்துக்கொண்டு நெய்யில் ஊதினால் உஷ்ணக் காற்று நெய்யில் பட்டு ஈரத்தை வற்றடிக்கும். உஷ்ணக்காற்று நெய்யில் கொப்பளமிடவேண்டும். இதற்குப் பதிலாக நெய்யை சிறிது நேரம் அனலிலும் வைக்கலாம்.

## கிராம முன்னேற்ற விஷயம்

இந்திய ஜனங்களிற்கு ஜீவாதாரம் இந்திய கிராமங்கள் தான் என்று ஒரு ஆசிரியர் கூறியிருக்கிறார். இந்திய கிராமங்களிலிருந்து தான் இந்திய ஜனங்களுக்கு உணவுப்பொருள்கள் உண்டாகின்றன. ஆகவே, இந்தியாவில் கிராமங்கள் முக்கியப்பிரதேசங்களாக விருந்து வருகின்றன, இனியும் அவைகள் அப்படியே இருக்கப்போகின்றனவென்பதில் சந்தேகமில்லை. இந்திய ஜனங்களில் 100க்கு 90 பேர்கள் கிராம ஜனங்களாயிருக்கிறார்கள். ஆகவே, கிராமங்களின் முன்னேற்ற விஷயந்தான் இராஜீய ஊழியர்களாலும் சமூக ஊழிர்யகளாலும் முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டும், இந்திய கவிரத்தினமாகிய டாக்டர் ரவீந்திர நாத் தாகூர் அவர்கள சாந்திநிகேதனென்கிற ஆச்ரமத்தை மேற்கூறிய கிராம முன்னேற்ற வியஷத்தை முன்னிட்டுத்தான் ஸ்தாபித்தார். கிராமத்தவர்களுக்கு கிராம முன்னேற்ற விஷயங்களில் உற்சாகமும் ஆசையும் ஏற்படவேண்டும். நமது மிஸ்டர் ஸி. எப். ஆண்ட்ரூஸ் கவியோடு பலதுறைகளில் உழைத்து வருகிறவர். கிராம குழந்தைகளுக்குக் கிராம அபிவிருத்தி விஷயங்களில் ருசி உண்டாக வேண்டுமென்றும், அவர்களுக்கு ருசி உண்டாகும் பக்ஷத்தில் அவர்களின் மூலமாக கிராமங்களில் வயது வந்தவர்களும் ருசியை வஹிக்கத் தொடங்குவார்களென்றும், குழந்தைகள் வயது வந்த பின்பு அவர்களின் மூத்தோர்களைக் காட்டிலும் அதிக வலுவுடையவர்களாகவும், அதிக முயர்ச்சி யுடையவர்களாகவும் வாய்வார்களென்றும் மிஸ்டர் ஆண்ட்ரூஸ் கூறுகிறார். மேற் கூறிய யோசனை வெகு உயர்ந்ததென்பதில் சந்தேகமேயில்லை. அந்த யோசனையின் படி ஆச்ரமத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் முயர்ச்சிகள் நடைபெறுகின்றன. கிராம பிள்ளைகள் கிராம தெருக்களை விளக்கி சுத்தம் செய்கிறார்கள், கிராமங்களிலுள்ள முள் காடுகளை அழிக்கிறார்கள், வீடுகளின் பக்கங்களிலுள்ள குப்பைகளை யெடுத்து அப்புறப்படுத்துகிறார்கள், கிராமக் குளங்களைப் பரிசுத்த ஸ்திதியில்



வைக்கிறார்கள். அதிகாரிகளும், சமூக ஊழியர்களும் இக்கிராமங்களில் நடைபெறும் முயர்ச்சிகளைப்பற்றி வெகு உயர்வாகப் பேசுகிறார்கள். இக்கிராமங்களில் குழந்தைகளுக்கு நோய்கள் முன்போல் வருகிறதில்லையாம், விஷஜ்வர உபத்திரவமே கிடையாதாம், கிராம ஜனங்கள் முன்காலத்தை விட அதிக ஆரோக்கிய ஸ்திதியிலிருக்கிறார்களாம்.

நம்முடைய தேசத்தில் கிராமப் பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் கிராம முன்னேற்ற ருசியை வஹித்து கிராமப் பள்ளிக்கூடப்பிள்ளைகளை கிராம வேலைகளில் அமைக்க வேண்டும்.

## வியவஸாயிகளின் மாட்டு விஷயம்

மாடர்ன்ரிவியூ பத்திரிகையில் லெப்டினன்ட் S. டட்டு, பி. எஸ்ஸி., எம். ஆர். ஸி. வி. எஸ்., மாட்டுநோய்களின் மூலங்களை ஒழிக்க முயர்ச்சி செய்து வருகிற மாட்டு வைத்திய நிபுணர்களின் ஊழியம் வாந்திபேதி, வைசூரி இவைகளின் மூலங்களை ஒழிக்க முயர்ச்சி செய்து வருகிற வைத்திய நிபுணர்களின் ஊழியத்திற்குக் குறைந்ததல்லவென்று கூறியிருக்கிறார். நமது தேசத்தில் மாடுகள் வியவஸாயிகளுக்கு உழவிற்காகவும், சவாரிக்காகவும், பால் நிமித்தமாகவும் அவசியமானவை. மாட்டு வைத்திய முயர்ச்சிகள் தக்கபடி நடைபெறாவிட்டால் இந்திய வியவஸாயம் ஓங்காதென்பதைப்பற்றி வெகு தெளிவாய் மிஸ்டர். டட்டு எழுதுகிறார். மாடுகளின் அபிவிருத்திக்கு மாட்டு நோய்களின் மூலங்கள் ஒழிக்கப்பட வேண்டியது அவசியமான விஷயம், நோய்களினால் உண்டாகும் மாட்டுச் சேதங்கள் தடுக்கப்படாவிட்டால், மாட்டு வகைகளின் அபிவிருத்தி முயர்ச்சிகளால் தக்கபயன்கள் ஏற்பட மாட்டா. கவர்மெண்டு மாட்டு வைத்திய இலாகாவானது தொத்து வியாதிகளால் அதிக சங்கியையான மாடுகள் இறந்து போவதை நிறுத்த முயலுகிறதே யொழிய தனித்தனி மாட்டுக்கு வரக்கூடிய நோய்களைப்பற்றி அது கவனிக்கிறதேயில்லை. கவர்மெண்டார் மாட்டு அபிவிருத்தி இலாகாவை வலுக்கச் செய்ய வேண்டும். அது வலுத்தால் தேசத்தின் செல்வம் அதிகரிக்குமென்பதில் சந்தேகமில்லை. தேசத்தில் மாட்டு வைத்தியமும் மாட்டு அபிவிருத்தி விஷயமும் முக்கியமாகக் கவனிக்கப் படவேண்டுமென்பதை ராயல் கமிஷனர்களும் வற்புறுத்தியிருக்கிறார்கள்.

## ஜனங்கள் கிராமத்தில் போய்ச் சேரவேண்டிய அவசியம்

"கூட்டு வாழ்வு ஏற்படுவதற்கும் அது விருத்தியாவதற்கும் ஜனக் கூட்டமும், முயற்சிகளும், யோசனைகளும் முக்கியமாய் வேண்டும். கிராமங்கள் ஆகாரப் பொருள்களையும் கைத்தொழில்களுக்கு வேண்டிய பொருள்களையும் வஹிப்பது போலவே மேற் சொல்லியவைகளையும் வஹிக்கின்றன. மேதை என்பது பட்டணங்களில் பிறப்பதில்லை. உலகத்தில் உயர்வான மதங்களெல்லாம் காடுகளிலிருந்தும் மலைகளின் மேலிருந்தும் தான் உண்டாயின; உலக அபிவிருத்தி தத்துவங்கள் பெரிய புலவர்களால் உபதேசிக்கப்படவில்லை. பிரபஞ்ச சாஸ்திர ஆராய்ச்சிகள், காட்டுப் பிரதேசங்களிலும், கிராம்ய ஜனங்களோடு வசித்தவர்களால் தான் செய்யப்பட்டன." இவ்வாறு ஒரு ஆசிரியர் எழுதுகிறார். இப்பொழுது நாம் காண்பதென்ன? பட்டணங்கள் அதிவேகமாய் விருத்தியாகிக் கொண்டு வருகின்றன; போன நூற்றாண்டில் லண்டன் நகரமானது நாலு பங்கு அதிகமாக வளர்ந்திருக்கிறது, 1850 இலிருந்து 1890 வரையில் பெர்லின் நகரம் நியூயார்க்கை விட அதிக வேகமாய் விருத்தியாயிற்று; பாரிஸ் நகரம் தற்போது 1800 இல் அது இருந்த அளவைக்காட்டிலும் ஐந்து பங்கு அதிக பெரிதாயிருக்கிறது. ரோமபுரி 1890 இல் அது இருந்ததைவிட அரைப்பங்கு அதிகமாயிருக்கிறது; கெய்ரோ 1850 இல் அது இருந்ததைப்போல் இரண்டு பங்காயிருக்கிறது,' 'மாடர்ன் ரெவியூ" வில் இவ்விதமாக ஒரு ஆசிறியர் எழுதுகிறார். இவ்விவரங்கள் உலகத்தில் பட்டண அபிவிருத்தி வெகு விரைவாக நடந்து வருவதை நிரூபிக்கின்றன. நம்முடைய தேசத்திலும் பட்டணங்கள் ஏறக்குறைய அதேமாதிரியே விருத்தியாகின்றன. 1800 இலிருந்து 1890 வரையில் பொம்பாயின் ஜனத்தொகை 1½ லக்ஷங்களிலிருந்து 8¼ லக்ஷங்களாக விருத்தியாயிருக்கிறது. அது போலவே கல்கத்தாவிலும் இதர நகரங்களிலும் ஜனத்தொகை விருத்தியாயிருக்கிறது. நம்முடைய தேசத்தில் நகரங்களில் உள்ள தொழிற் சாலைகளில் வேலை செய்வதற்காக கிராமங்களிலுள்ள ஜனங்கள் கிராம முயர்ச்சிகளை விட்டு விட்டு நகரங்களுக்குச் செல்வதால் கிராம முயர்ச்சிகளுக்கு ஊழியர்கள் போதாமல் போகிறது. கிராமங்களிலுள்ள நடுத்தர வகுப்பினர்களும் பட்டணங்களில் ஸர்க்கார் கச்சேரிகளில் குமஸ்தா



வேலைக்குச் செல்லுகிறார்கள். கிராமங்களிலுள்ள தனிகர்களும் பட்டணவால சுகங்களை உத்தேசித்துக் கிராமங்களை விட்டு விட்டு பட்டணங்களுக்குச் செல்லுகிறார்கள் ஆகவே, குடியானவர்கள் மாத்திரம் நல்ல காற்றில்லாமலும், நல்ல ஜலமில்லாமலு மிருக்கிற கிராமங்களிலிருந்து கஷ்டப் பட்டுக்கொண்டு உழைக்க வேண்டியதாக விருக்கிறது. தொழில்களும் தொழிற்ச் சாலைகளும் ஓங்கியிருக்கிற மேநாட்டு தேசங்களிலேயே கிராம அபிவிருத்தி உணர்ச்சி அதிகமாகிக்கொண்டு எல்லோரும் பட்டணங்களை விட்டு கிராமங்களில் வாஸமாகப் போக வேண்டு மென்ற உணர்ச்சியை கைக்கொள்ளுகையில் தொழிலபிவிருத்தியில் குறைவாயிருக்கிற நம்முடைய தேசத்தில் அவ் வுணர்ச்சி எவ்வாறு கைக்கொள்ளப்பட வேண்டு மென்பது நன்கு விளங்கும். நம்முடைய தேசம் முக்கியமாய் வியவஸாய தேசம். வியவஸாயம் கிராமங்களில் அநுஷ்டிக்கப் படுகிறது. ஆகவே, இந்தியாவின் மகிமை அதன் கிராம முயர்ச்சிகளால் தான். இந்தியாவில் தொழில் அபிவிருத்தியானது வியவஸாய உற்பத்திக் கேற்றபடி அமைய வேண்டும். இப்படி அது அமையுமானல் பட்டண அபிவிருத்தியானது கிராம அபிவிருத்திக்கு இடையூருக ஏற்படாது. பட்டண விருத்தியால் கிராம அபிவிருத்தி உயரும்.

## உணவுகளில் ஆரோக்கிய ஆதாரப் பொருள்கள்

ஆங்கிலத்தில் உணவுப் பொருள்களிலுள்ள ஆரோக்கிய ஆதார வஸ்துக்களுக்கு விடாமின்சு என்ற பெயர் கொடுக்கப் பட்டிருக்கிறது. உணவுகளில் இவைகள் தக்கபடி அமைந்திருக்க வேண்டு மென்பதை எல்லோரும் சவனிக்க வேண்டும். "ஓரியண்டல் வாட்ச்மன் அண்டு ஹெரல்ட் ஆப் ஹெல்த்து" என்னும் பத்திரிகையில் டாக்டர் எச்சு. வீ. மாங்கெல் என்பவர் நம்முடைய ஆஹாரங்களில் மேற்கூறிய ஆரோக்கிய வஸ்துக்கள் எத்தகைந்த அளவுகளில் இருக்கின்றன வென்பதைப் பற்றி விவரித்து எழுதி யிருக்கிறார். ஆரோக்கிய வஸதுக்கள் A, B, C, D, E, என்று ஐந்து வகைகளாகப் பிரிக்கப் பட்டிருக்கின்றன. ஒவ்வொரு வகையும் அதற்கென்ற குணங்களை வஹிக்கிறது. அவைகள் தக்கபடி உணவுகளில் அமைய வேண்டியவிஷயத்தை டாக்டர் மாங்கெல் நன்றாய் எழுதிக்காட்டியிருக்கிறார். ஆரோக்கிய ஆதாரவஸ்துக்கள் ஆகாரங்களில் 2000 த்தில் ஒரு பாகமாக

விருக்கிறபடியால் அவைகளைத் தனிப்படுத்திப் பார்க்க முடியாது. அவைகள் உணவுகளில் தக்கபடி இருப்பதும், இராமலிருப்பதும் உணவுகள் புசிக்கப் பட்ட பின்பு காணப்படும் பயன்களிலிருந்து தான் அறியப்படவேண்டும். ஏ. வகுப்பு ஆரோக்கிய ஆதாரப் பொருள் குழந்தைகளுக்கு முக்கியமானது. குழந்தைகள் வளருவதற்கும், குழந்தைகளும் பெரியவர்களும் தொத்து நோய்களை அடையாமலிருப்பதற்கும் அது அவசியமானது. உணவுகளில் இப் பொருள் குறைந்திருந்தால் கண்களில் நோய்கள் உண்டாகும். சரீரத்தில் பலம் குறையும், காசமும் தொத்து நோய்களும் உண்டாகும். பீ. வகுப்புப் பொருள் குழந்தைகளிலிருந்து கிழவர்கள் வரையில் எல்லோருக்கும் அவசியமானது. இப் பொருள் தக்கபடி உணவுகளில் இல்லாவிட்டால், பசியின்மை, ஜீர்ண வகையில் நோய்கள், வயிறெடுப்பு, மலச் சிக்கல், பெரிபெரி முதலிய நோய்கள் உண்டாகும். கீரைகள் தக்காளிப்பழங்கள், கிழங்குகள், பருப்புகள் இவைகளில் பீ. வகுப்பு ஆதாரப் பொருள் நிறைந்திருக்கிறது. ஸீ வகுப்பு ஆரோக்கிய ஆதாரப் பொருள் உணவுகளில் குறைந்திருந்தால் பற்கள் தேய்ந்து போகும், குடலில் புண்கள் ஏற்படும், ஜீர்ணம் குறைவு படும், தோலில் சிரங்குகள் வரும். டீ வகுப்பு பொருள் உணவு களில் குறைந்திருந்தால் குழந்தைகள் சரிவர வளரா, அவைகளின் எலும்பு சிம்பி ரத்தம் குறைந்து இளைத்துப் போகும், வயது வந்தவர்களுக்கு கீல் வாயு நீர் வியாதி, முதலியவைகள் உண்டாகும். சூரிய வெளிச்சம்தான் இவ் வகைப் பொருளிற்கு ஆதாரமாகையால் குழந்தைகளும் வயது வந்தவர்களும் சூரிய வெளிச்சத்தில் அதிகமாய் நடமாடவேண்டும். வீடுகள் சூரிய வெளிச்சம் நன்றாய்ப் படியும்படிக்கும் காற்றுடும் படியாகவுமிருக்க வேண்டும். ஜன நெருக்கமும் கூடாது. கிராமாந்தர வாஸத்தில் இவ்வித சௌகரியம் சரியாய் ஏற்பட்டிருக்கிறது. ஈ வகுப்புப் பொருள் உணவுகளில் சரியானபடி இருந்தால் பிரஜோத்பத்தி சக்தி ஆண் பெண் இரு வகையினர்களிலும் குன்றாதபடி இருக்கும். கீரைகள், மாம்ஸம், கோதுமை, பால் இவைகளில் இப் பொருள் அதிகமாயிருக்கிறது.

கோதுமை, பருப்புகள், பால், நெய், தயிர், வெண்ணெய், மோர், பல விதக் காய்கறிகள், கிழங்குகள், பூக்கள், பழங்கள் இவைகளை ஆகாரத்தில் சேர்த்துப் புசிக்கவேண்டும். மில்களில் அரைத்த அரிசி



களையும், பழசாய்ப்போன பருப்புக்களையும் ஜனங்கள் உபயோகிக்கக் கூடாது. முளைக்கட்டின பருப்புக்களையே உபயோகிக்க வேண்டும். தானியங்களை வாங்கி உடைத்துப் பருப்புக்களை உபயோகிக்க வேண்டுமே ஒழிய, வெகுநாளைக்கு முன் உடைத்த பருப்புக்களை வாங்கி உபயோகிக்கக் கூடாது. அரிசியில் தவிடு கொஞ்சமிருக்க வேண்டும். அது பசையில்லாமலிருக்கக்கூடாது. சமையல் செய்வதில் அரிசியைக் கொதிக்க வைக்கும்பொழுதுக் கஞ்சிதங்காமல் சாதத்தால் கிரஹிக்கும் படியாய்க் குறைந்த அளவிலேயே நீரை உலை வைக்க வேண்டும். கஞ்சியை வடித்து விடுகிறதினால் ஆரோக்கிய ஆதாரப் பொருள் சாதத்தில் அற்றுப்போய் விடுகிறது. இன்னும் காய்கறி, கிழங்கு இவைகளை சமையல் செய்வதிலும் அவ்விதமாகவே நீரை குறைவாகவைத்து வேக வைக்க வேண்டும். அவைகள் வெந்த பின் நீரைக் கொட்டி விடக் கூடாது, கூடிய வரையில் காய்கறிகளை சமைப்பதில் அவைகளின் சத்துக்கள் வீண்போகாதபடி சமைக்க வேண்டும். உருளைக்கிழங்கு முதலியவைகளில் தோல்பாகம் வெகு முக்கியமானது. ஆகவே தோல்களை உரிக்காமலே அவைகளைச் சமையல் செய்யவேண்டும். பூஷணிக்காயில் அதின் ஸாரம் வெகு முக்கியமான உணவு. பூஷணிக்காயின் குடல்களை எடுத்து எறிந்து விடக் கூடாது. தக்காளிப்பழம், பப்பிளிக்காய் முதலிய சாகங்கள் உயர்வான போஷண வஸ்துக்களாகையால் அவைகளை ஜனங்கள் உபயோகிக்க வேண்டும்.

# அறிக்கை

“ரூரல் இந்தியா” சந்தாதாரர்களும் அட்வர்டிஸ்மெண்டு கட்டணங்களும் பாரெஸ்டு பஞ்சாயத்து யூனியன் லிமிடெட்டுக்குச் சேர்ந்தபணங்களாகையாலும் யூனியன் ரிஜிஸ்டராகி விட்டபடியால் கணக்கு ஒன்றாகவே இருக்க வேண்டியிருப்பதினாலும் இனி ஷேர்தாரர்கள் பத்திரிகையின் மானேஜரின் விலாஸத்திற்கல்லாமல் அடியில் கண்ட விலாஸத்திற்கே அனுப்பப்பட வேண்டியதென்று கேட்டுக்கொள்ளப்படுகிறது.

A ராஜகோபால ரெட்டி.

பிரஸிடெண்டு, பாரெஸ்ட்டு பஞ்சாயத்தார் யூனியன் லிமிடெட்டு
முகாம்:—பாலவாக்கம் ஊத்துக்கோட்டை போஸ்டு செங்கற்பட்டு

# வர்த்தமானக் குறிப்பு

சிதம்பரத்தில் அமைக்கப்பட்டிருக்கும் இராஜா ஸர் அண்ணாமலை கலாசாலைக்கு ரைட் ஹானரபில் வி. எஸ். ஸ்ரீனிவாஸ ஸாஸ்திரிகள் வைஸ்ச்சான்ஸெல்லராக நியமிக்கப்பட்ட பின்பு அவர் இந்தியா கவர்மெண்டாரால் கீழ் ஆப்ரிகாவிற்கு வெகு முக்கியமான இராஜீய விஷய வேலைக்காக நியமிக்கப்பட்டிருக்கிறார். ரைட் ஹானரபில் சாஸ்திரிகள் அந்த தேசத்திற்குச் சென்று விட்டார். அவருக்குப் பதிலாக ஆசிரியர் எஸ். ஈ. ரங்கநாதம் வைஸ்ச்சான்ஸெல்லராக நியமிக்கப்பட்டிருக்கிறார். நம்முடைய தேசத்தில் முக்கியமாய் வியவஸாயம் தான் ஜனங்களின் தொழிலாகவிருக்கிறபடியால் சிதம்பரம் கலாசாலையானது கிராம அபிவிருத்தி சம்பந்தமான விஷயங்களில் கல்வி போதனைகளை யநுஷ்க்கவேண்டுமென்றும் ஆசிரியர் ரங்கநாதம் அவர்கள் இவ்விஷயத்தைக்கவனித்து ஆலோசனை செய்து வந்தால் கெனியாவிலிருந்து திரும்பி வந்து வைஸ்ச்சான்ஸெல்லர் வேலையை ஒப்புக்கொண்டவுடன் ரைட் ஹானரபில் ஸாஸ்திரிகள் அவ்விஷயத்தைப்பற்றி மேல்கொண்ட நடவடிக்கைகளை நடத்துவார். ஆசிரியர் ரங்கநாதம் அவர்கள் நாம் குறிப்பிட்டபடி ஆலோசனைகளைச் செய்ய வேண்டுமென்று வணக்கமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

---

திருவாங்கூர் ஸமஸ்தானத்தில் ஹைகோர்ட்டு ஜட்ஜியாயிருக்கிற ஸ்ரீமான் எஸ். வி. சுப்பிரமணிய ஐயர் அவர்கள திவான் வேலையை விட்டு நீங்கும் மிஸ்டர் வாட்ஸ் அவர்களுக்குப்பதிலாகத் திவானாக நியமிக்கப்பட்டது நமக்கு சந்தோஷத்தைக்கொடுக்கிறது. ஸ்ரீமான் எஸ். வி. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் திருவாங்கூரைச் சேர்ந்தவராதலால் திருவாங்கூர் ஜனங்களிற்கும் இந்த நியமனம் திருப்தியைக் கொடுக்கும்.

---

மாடுகளிற்கு ஆகாரங்கள் அகப்படுகிற விஷயமாக மைசூர் ஸமஸதானத்தில் விசாரணைகள் நடத்தப்படவேண்டுமென்று ஒரு ஆசிரியர் ஒரு மைசூர் பத்திரிகையில் எழுதியிருக்கிறார். மைசூர் இராஜ்ஜியத்தில் பஞ்சங்கள் உண்டாகின்ற பிரதேச



ங்களைப் பற்றியும் அவைகளேற்படுகிற விதங்களைப் பற்றியும் அவைகளை யொழிப்பதற்கு எடுத்துக்கொள்ளப் படுகிற முயர்ச்சிகளைப் பற்றியும் விவரங்கள் தயாரிக்கப் படவேண்டுமென்றும், ஸமஸ்தானத்தில் ஒரே சீரில் மழைபெய்கிறப் பிரதேசங்களைப் பற்றியும் ஒரேவிதமான சீதோஷ்ண ஸ்திதிகளையுடையப் பிரதேசங்களைப்பற்றியும் படம் ஒன்று தயாரிக்கப் படவேண்டுமென்றும், ஸமஸ்தானத்தில் மேய்ச்சல் ஸ்தலங்களின் விவரங்கள் தயாரிக்கப் படவேண்டு மென்றும், காடுகளில் தீனித்தழைகாய் முதலியவை அகப்படக்கூடிய விவரங்களைப்பற்றியும், பஞ்சகாலங்களிலும் மழையில்லாத காலத்திலும் மழையை எதிர்ப் பார்க்காமல் வளரக்கூடிய உணவுச் செடிகளைப் பயிர் செய்ய வேண்டிய விஷயங்களைப் பற்றியும், காடுகளில் உணவுச் செடிகளைப் பயிர் செய்வதற்காக நாத்துச் செடிகளும் விரைகளும் உற்பத்தி செய்யப் பட வேண்டிய விஷயத்தைப்பற்றியும், உயர்ந்த புல் தழை இவைகளை மூட்டைகளாக இறுத்துக் கட்டி விற்பனைக்கு வைக்க வேண்டிய விஷயத்தைப் பற்றியும், தற்போது உணவுகளாக உபயோகப் படும் புல்களிலும், தழைகளிலும் போஷண குணங்களின் விவரங்களைப் பற்றியும் விசாரணைகள் நடத்தப் பட வேண்டு மென்று கூறுகிறார். மேற்சொல்லிய விஷயங்களில் விசாரணைகள் மைசூரில் போலவே மற்ற மாகாணங்களிலும் நடத்தப்பட வேண்டியது அவசியமாயிருக்கிறது. நம்முடைய மாகாணத்தில் பாரெஸ்டு பஞ்சாயத்தார்கள் பாரெஸ்டுகளில் உணவுகளுக்கு உபயோகப் படக்கூடிய செடி வகைகளை பயிர் செய்யலாமாகையால் அவர்களின் நிர்வாஹத்திற்கு அதிகக் காடுகள் ஒப்பி விக்கப்பட்டு அவர்களை காடுகளில் அவ்விதச் செடிகளைப் பயிர் செய்யும்படியும் உயர்ந்த புல் தழை இவைகளைத் தயாரிக்கும்படியும் செய்விக்க வேண்டும். பாரெஸ்டு இலாகா உத்தியோகஸ்தர்கள் பஞ்சாயத்தார்களுக்கு இவ்வழிகளில் போதனைகளையும் யோசனைகளையும் கொடுக்க வேண்டுமென்று கோருவோம்.

---

## இந்திய விவசாயம்

ஏழாவது வருடம் நடக்கிறது.

பயிரிடும் முறை, கால்நடை பரிபாலனம், கூட்டுறவு கிருஷிகர் செய்யக்கூடிய சிறு தொழில்கள், முற்போக்கான விவசாய முறைகள், முதலிய பல விஷயங்களைக்கொண்டு வெளிவரும் ஓர் தமிழ்ப் பத்திரிகை.

மானேஜர், இந்திய விவசாயம் ஆபீஸ்,

## ஆரோக்கிய விஷயக் குறிப்புகள்

### பால்

பால் குறைவற்ற ஆகாரம். உடலுக்குத் தேவையான ஆகாரப் பொருள்கள் எல்லாம் அதில் அடங்கி யிருக்கின்றன. பாலிலுள்ள புரோடீன்கள் சதையையும் மாம்ஸத்தையும் நிர்மாணிக்கின்றன. பாலில் அளவற்ற சுண்ணும்பும் பாஸ்பரஸும் உலோகப் பதார்த்தங்களு மிருக்கின்றன. அவை எலும்புகளும், பற்களும் உண்டாவதற்கு முக்கியமானவைகளா யிருக்கின்றன. பாலில் இருக்கப்பட்ட ஜீவஸத்து பொருள்கள் நோயை வரவிடாமல் தடுத்து ஆரோக்கியம், அழகு இவற்றைக் கொடுக்கின்றன. ஒரு பவுன் கெட்டி உணவில் போஷணை சக்தியுள்ள வஸ்துக்கள் எவ்வளவு உண்டோ அதைவிட அதிகமாக அவ்வஸ்துக்கள் பாலில் இருக்கின்றன. இரண்டு முட்டைகள், ஒரு உருளைக்கிழங்கு, மாம்ஸத் துண்டு, இவைகள் கொடுக்கக்கூடிய வலிவை ஒரு கிளாஸ் பால் தரக்கூடியது.

### உலர்ந்த வாழைப்பழம்

சரீர போஷணைக்கு வேண்டிய ஸகல சத்துக்களும் வாழைப் பழத்தில் இருக்கின்றன. வாழைப்பழம் சீக்கிரத்தில் ஜீர்ணமாகக் கூடியது. மேலும் நன்கு உலர்ந்த பழங்களைத் தோலுரித்து நீட்டு வசத்திலோ அல்லது பில்லைகளாகவோ நறுக்கி உலர்த்தி வத்தல் செய்து கொள்ளலாம். இரும்புப் பாத்திரங்களில் உலரவைக்கக் கூடாது; மஸ்லீன் துணிகளில் காயவைக்க வேண்டும். நான்கு பக்கங்களும் மூங்கில் சட்டங்களைக் கோர்த்து அதில் மஸ்லின் துணியைக்கட்டி அதில் இப் பழத்துண்டுகளை உலர்த்த வேண்டும். வாழைப்பழவத்தல்கள் மேநாடுகளுக்கு இதர தேசங்களால் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. நமது தேசத்தில் வாழைப் பயிர் முக்கியமான பயிர்களில் ஒன்றாயிருப்பதால் வாழைப்பழ வத்தல்கள் ஏராளமாகச் செய்யப்படக் கூடும். வியவஸாயிகள் இத் தொழிலை எளிதில் அநுஷ்டிக்கலாம். அந்நிய நாடுகளுக்கு இச் சரக்கானது ஏற்றுமதி செய்யப்படக்கூடும்.

### தொண்டை நோயைத் தடுக்கும் வழி.

வாய், தொண்டை, பற்கள் இவைகளை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். பல்லை, உப்பு, கரி இவைகளால் துலக்குவதைக் காட்டி



லும் ஒரு மரத்தின் புதிய குச்சியினால் துலக்குவது மேலானது. ஒவ்வொரு தடவையிலும் உஷ்ணமான உப்பு நீரால் தொண்டையை அலம்பிக் கொப்பளிக்க வேண்டும். சுருட்டைப் பிடிக்கக் கூடாது. சாயங்காலவேளைகளில் ஜநசிரம்பிய கடைத்தெருக்களில் போகக் கூடாது. ஜனநெருக்கமுள்ள காற்றோட்ட மில்லாத, ஈரமுள்ள ஸ்தலங்களுக்குப் போகக் கூடாது. புளிப்புப் பழங்களையும், புளிப்புக் கறிகளையும் சாப்பிடக் கூடாது. ஊர்காய் முதலிய கார வஸ்துக்களை அதிகமாக சாப்பிடக் கூடாது. மலச் சிக்கலில்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். குடலில் மலம் தங்கினால் தொண்டை நோவு அதிகரிக்கும். மனோ விகாரமுள்ளவர்களும், நட்ப சரீரிகளும் விருத்தர்களும் முக்கியமாய் சாயங்காலம் குளிரிருக்கும்பொழுது கழுத்தைச் சுற்றி பிளானல் போர்வையைப் போட்டுக் கொண்டிருக்க வேண்டும். படுக்கும் பொழுது சூடான பாலைச் சாப்பிட்டால் தொண்டைக்கு ஹிதமாக விருக்கும். மலக்கை கழியச் செய்யும். தொண்டை கட்டி இருப்பதில் இருந்தால், ஆலம் (Alum) பவுடரை ஒரு துளி எடுத்து சூடான உப்பு ஜலத்தில் சேர்த்து கொப்பளிக்க வேண்டும். அடிக்கடி மேகி உப்பைச் சாப்பிட வேண்டும். ஹிதமான பானங்களாவன: ஒரு கிளாஸ் பாலில் இரண்டு மிளகைச் சேர்த்து சாப்பிடலாம். மிளகும் கற்கண்டும் சேர்த்து சாப்பிடலாம். டிங்சர் பென் ஜொயின், கற்பூரம் மெந்தால், இவைகளைக் கொதிக்கும் வெந்நீரில் சேர்த்து ஆவியைப் பிடிக்கலாம்.

இனம்! ரப்பர் முத்திரை இனம்!!

நமது சக்கரவர்த்தி அவர்களால் நன்கு மதிக்கப் பெற்ற 14 காரட் கோல்ட் நிப்பு பதித்த பவுண்டன் பேனா வெகு நாளைக்கு உழைக்கும், எல்லா காகிதத்திலும் நன்றாக எழுதும்.




இந்தபேனா வாங்குவோருக்கு அவர்களுடைய (முழு) விலாசத்துடன் (ரப்பர் முத்திரை) (இனமாய்) செய்தனுப்பப்படும்.

பேனா 1-க்கு ரூ. 2—10—0 கேட்லாக் இனம்.

ஜீ. எஸ், அண்ட் கோ.

8, கோவிந்தப்ப நாயக்கன் வீதி, (மதராஸ்)

# மதிப்புரை

## ‘கிராமக் கல்வி’

மாயவரம் வக்கீல் எ.நடேசப் பிள்ளை. பரிமளா பிரஸ், மாயவரம்.

இப்புத்தகத்தில் ம-ள-ள-ஸ்ரீ நடேச பிள்ளையவர்கள் கிராம கல்வி முறைகளிலுள்ள குறைகளை எடுத்துக்காட்டி அம் முறையில் கிருஷிக்கல்வி சேர்க்கப்பட வேண்டிய விவரங்களை தெளிவாய்க் கூறியிருக்கிறார். அவர் சொல்லுவது போலவே, கிராமப் பள்ளிக்கூடங்களில் போதிக்கப் பிள்ளைகளுக்கும் கிராம வாழ்விற்கும் ஏற்றவையல்ல. வியவஸாயக் கல்வியும் கைத்தொழில் கல்வியும் நம்முடைய கிராமப் பிள்ளைகளுக்கு அவசியமானவை. அவைகளைப் பற்றி கவர்மெண்டாரும், லோகல் போர்டாரும் சரிவர கவனிக்கிறதில்லை. இவ்விதக் கல்விகளைக் குறித்த புத்தகங்கள் சுதேச பாஷைகளில் இல்லாமையால், ஸ்ரீமான் பிள்ளை அவர்கள் அவைகளைத் தயாரிப்பதற்கு பொருளாதார வழியைச் சொல்லுகிறார். கிருஷிச் சங்கங்கள் ஏற்பட வேண்டிய அவசியத்தையும் கூறுகிறார். அநேக திறமான யோசனைகள் இப்புத்தகத்தில் அடங்கியிருக்கின்றன. தேச ஊழியர்களும், கல்வியிலாகா அதிகாரிகளும் இதை பார்வையிடவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள்.

“இந்தியன்”: ஓர் தமிழ் தேசீய மாதப்பத்திரிகை. ஆதமன் கோட்டை, சேலம் ஜில்லா “இந்தியன்” பத்திரிகையின் ஜனவரி பிப்ரவரி சஞ்சிகை நமக்குக்கிடைத்திருக்கிறது. இப்பத்திரிகை தேச சேவையை நோக்கமாக உடைத்தாயிருக்கிறது. நமக்குக்கிடைத்திருக்கிற சஞ்சிகையில் சமூக ஊழல்களைப்பற்றியும் இன்னும் இதர முக்கிய விஷயங்களைப்பற்றியும் உயர்வான கட்டுரைகள் இனிய தமிழில் வெகு தெளிவாயெழுதப்பட்டிருக்கின்றன.

“பாரதி” ஓர் தேசீய மாதப்பத்திரிகை, உத்தமபாளையம், மதுரை ஜில்லா:— “பாரதி”யின் ஜனவரி மாதச்சஞ்சிகையும், பிப்ரவரி மாதச் சஞ்சிகையும் நமக்கு மதிப்புரைக்காக அனுப்பப்பட்டிருக்கின்றன. “பாரதி” பத்திரிகையின் நோக்கம். நமது தேசமானது ஜப்பானைப்போல் பலதுறைகளிலும் நவீன வழிகளில் முன்னேற்றத்தையடையவேண்டுமென்பது. அந்நோக்கத்திற்கு ஏற்றபடியே தேசீய விஷயங்களில் நேர்த்தியான கட்டுரைகளும், பெரியார்களின் ஜீவித சரித்திரங்களும் விவேகத்தைப் புகட்டக்கூடிய இதர வியாஸங்களும் மேற் கூறிய சஞ்சிகைகளில் திறமைவாய்ந்த ஆசிரியர்களால் உயர்ந்த தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. “பாரதி”யை தமிழர்கள் அனைவரும் ஆதரிப்பார்களாக.


## எம்மிடம் வாங்கிப் பாருங்கள்

நாணயம், சொல்தவறாமல் செய்து கொடுத்தல், சரியான
நகைகள், கெம்புகள், வைரங்கள் இவைகளை நீர்
நாடு விராதல் எம்மிடம் ஒரு தடவை
வாங்கிப்பார்த்தால், நாம் செய்கிற
ஸகாயத்தைப்பற்றிநீர் அதிக
திருப்தி யையடைவீர்
என் பதில் சந்
தேகமே
இல்லை.

## எங்களுடைய கருர் விலை

உங்களுக்கு திருப்தியையே கொடுக்கும். வீடுகளில்
உபயோகிக்கக் கூடியவையும், விசேஷகாலங்
களில் வெகுமதியாக கொடுக்க யோக்ய
தையான வெள்ளிப்பாத்திரங்களையும்
நாங்கள் நல்ல வேலைக்காரர்களை
வைத்துக்கொண்டு செய்
கிறோம் ஒரே தடவை
எம்மை பரீக்ஷை
பாருங்கள்.

ஸூராஜ் மல் லல்லுபாய் அண்டு கோ.,
கீர்த்தி பெற்ற வைர வியாபாரிகள்,

13 எஸ்பிளனேட் : : : : மதராஸ்.

80-வருஷ காலமாக உலக பிரசித்திபெற்ற

# அசல்



காரம்
மணம்
நிறம்
குணம்
வாடை
உள்ளது.

அநேக
மெடல்கள்
நற்சாட்சி
பத்திரங்கள்
பெற்றது.

# ஷண்முகம் பட்டணம்பொடி

**ஷண்முகம் மூக்குத்தூள் கம்பெனி லிமிடெட்,**
**போஸ்ட் பாக்ஸ் 140, மதுரை.**

80 வருஷக்காலமாக சென்னையிலே, சிறப்பு வாய்ந்த ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப்பத்திரங்கள் பெற்று தினசரி லெட்டர்களால் புகழ்பெற்று அன்றாடம் நூற்றுக்கணக்கான பார்சல்களை சோல் ஏஜண்டுகள் தினந்தோறும் மெயிலில் பெற்று, ஜில்லா, தாலூக்கா, டவுன் கிராமம் முதல் குக்கிராமங்களிலும் கொண்டாடி, அசல் சேப் ரோல் வாடை, அசல் பசும்நெய் மணம், குளிர்ந்த குணம், இன்புறும் காரம், பவுன் நிறம் இவ்வைந்தும் ஒருங்கே இமையப்பெற்று நமது ஏஜண்டுகளுக்கு நற்கியாதி தந்து வியாபாரிகளுக்கு நற்பெயரளித்து உபயோகப்படுத்திய கனவான்களுக்கு மனோபீஷ்டம் தந்து இந்தியாவில் ஏராளமாக செலவாகிவருவது எது? எங்கள் அசல் ஷண்முகம் பட்டணம் பொடியே. இனிமேலாவது ஏமார்ந்து போகாமல் எங்கள் அசல் ஷண்முகம் பொடியை வாங்கி உபயோகப் படுத்தி இன்புறுங்கள்.

அசல் ஷண்முகம்பொடி விலை ஜாபிதா.

முதல்தரம் ஒரு வீசை ரூ 4-4-0 இரண்டாந்தரம் ரூ 3-4-0

**டாக்டர் ஆர். கே. பரிமள மூக்குத்தூள்.**

இதனால் ஜலதோஷம், ஒற்றைத்தலைவலி, மண்டைக்குத்தல், உள்படக் கண்டத்திற்கு மேற்பட்ட 103 சகல வியாதிகள் வெகு சீக்கிரத்தில் கண்டிக்கப் படுமென்பதில் சந்தேகமே கிடையாது. காலணா சாதா மூக்குத்தூளுடன் இந்தத்தூள் இரண்டொரு சிட்டிக்கை மாத்திரம் கலந்தால் தூள் முழுதும் சுகந்தமாய்விடும்.

| | விலை | | | தபால் கூலி | | | பாக்கிங் | | | தொகை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3 புட்டி | 0 | 9 | 0 | 0 | 4 | 0 | 0 | 1 | 0 | 0 | 14 | 0 |
| 6 புட்டி | 1 | 2 | 0 | 0 | 5 | 0 | 0 | 1 | 0 | 1 | 8 | 0 |
| 12புட்டி | 2 | 4 | 0 | 0 | 8 | 0 | [illegible] | 1 | 0 | [illegible] | 13 | 0 |

# SADHANA AUSADHALAYA

## DACCA (Bengal)

—ADHYAKSHA—

**Joges Chandra Ghose, M. A. F. C. S. (London)**

*Formerly Professor of Chemistry, Bhagalpur College.*

மிகவும் சுத்தமான ஆயுர்வேத ஔஷதங்கள் கிடைக்கும், வேண்டுவோருக்கு விலைப்பட்டி இனாமாக அனுப்பப்படும், வியாதியின் விவரத்தை தெரிவித்தால் இனாமாக மருந்துபட்டி அனுப்பப் படும்.

மகரத்வஜம் (சுவர்ணஸிந்தூரம்)

அசல் தங்கத்துடன் ஒருசேர் ... ரூ 4 0 0

இது எல்லா வியாதிகளுக்கும் [illegible] மருந்து, [illegible] வாதம் முதலிய வியாதிகளைப் போக்குவதுடன் [illegible] ஏற்றது.

சரிபாடி ஸாலா.

இது மூல ரோக ஸம்பந்தமான வியாதிகளுக்கெல்லாம் ஸரியான மருந்து.

விலை ஒருசேர் ரூ 3 0 0

சுக்ர ஸஞ்சீவி

இது வீர்யக்குறைவு, அபோகத்தன்மை, சுவப்னஸ்கிதம் முதலிய வியாதிகளுக்கு அமிர்தம் போன்ற மருந்து.

விலை சேர் 1க்கு ரூ 16 0 0

அபல் பந்தப ஜுர.

இது ஸதிகளுக்கு உண்டாகும், இடுப்புநோய் முதுகுவலி கர்ப்பஸ்ப வியாதி அகாலமாதவிடாய் முதலிய கொடும் வியாதிகளைப் போக்கும்.

16 டோஸ் ரூ 2. 50 டோஸ் ரூ

# அம்ருதாஞ்சனம்

என்ரு லென்ன?

தலைநோய், பக்க நோய், இல் நோய்,

கன்ன நோய், சழுத்து நோய், ஒற்றைத்தலை நோய்,

வர்ய்வு நோய், முதுகு நோய், பல் நோய், மூலசங்கை,

சளுக்கு, காயம், தேள், பூரான்,

பக்ஷவாதம், சைத்யம்




சளுப்பு, மார்சளி,

உப்பசம், மார்மூர்சு

கழுத்து சளி, ரத்தம் விழுதல்,

சந்திவாய்வு, சீழ் விழுதல்,

சுண்டு, பேன், முகப்பருவு, வீக்கம்,

நோய், செகப்பு, தத்துசள், படை,

சிறங்கு, தெனவு, எரிச்சல், இது

அது என்று சொல்வதேன் ?

எல்லா நோய்களையும்,

பாதைகளையும்,

போக்கும் ! பேர்க்கும் !! போக்கும் !!!

மூன்று விசைகளிலும் போக்கும்.

அமிர்தாஞ்சனம் டிபோ

பம்பாய் & மதராஸ்.

hed by Mr. *A. Rajagopala Reddi*, President, Forest Panchayatdars' Union Ltd. Madra
*Printed by Mr. T. E. V. SARMA AT THE MAGAZINE PRESS*
*CHINGLEPUT*